## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 6-8 - பொன்னுலகு
**('ஐஷ்வர்யப் பரப்பால் தம்மை மறந்த எம்பெருமான் அடியாரோடு ஏகரசனாகையாலே தூது விட்டால் வருவன்' என்றெண்ணி, பரத்வம் முதலியவற்றில் பராங்குச நாயகி பறவைகளைத் தூது விடுதல்)**

3304 * பொன்னுலகாளீரோ? *
புவனி முழுதாளீரோ? *
நன்னலப் புள்ளினங்காள்! *
வினையாட்டியேன் நான் இரந்தேன் **
முன்னுலகங்கள் எல்லாம்
படைத்த * முகில்வண்ணன் கண்ணன் *
என்னலம் கொண்ட பிரான்
தனக்கு * என் நிலைமை உரைத்தே 1

3305 மையமர் வாள்நெடுங்கண் *
மங்கைமார் முன்பு என் கையிருந்து *
நெய்யமர் இன்னடிசில் *
நிச்சல் பாலொடு மேவீரோ? **
கையமர் சக்கரத்து * என்
கனிவாய்ப் பெருமானைக் கண்டு *
மெய்யமர் காதல் சொல்லிக் *
கிளிகாள்! விரைந்தோடி வந்தே 2

3306 ஓடி வந்து என் குழல் மேல் *
ஒளிமாமலர் ஊதீரோ? *
கூடிய வண்டினங்காள்! *
குருநாடுடை ஐவர்கட்காய் **
ஆடியமா நெடுந்தேர்ப் *
படை நீறெழ செற்ற பிரான் *
சூடிய தண்துளவமுண்ட *
தூமதுவாய்கள் கொண்டே 3

3307 தூமதுவாய்கள் கொண்டு
வந்து * என் முல்லைகள் மேல் தும்பிகாள்! *
பூமது உண்ணச் செல்லில் *
வினையேனைப் பொய் செய்து அகன்ற **
மாமதுவார் தண்துழாய்
முடி * வானவர் கோனைக் கண்டு *
யாம் இதுவோ தக்கவாறு? *
என்ன வேண்டும் கண்டீர் நுங்கட்கே 4

3308 நுங்கட்கு யான் உரைக்கேன்
வம்மின் * யான் வளர்த்த கிளிகாள்! *
வெங்கண் புள்ளூர்ந்து வந்து *
வினையேனை நெஞ்சம் கவர்ந்த **
செங்கண் கருமுகிலைச் *
செய்யவாய்ச் செழுங்கற்பகத்தை *
எங்குச் சென்றாகிலும் கண்டு *
இதுவோ தக்கவாறு? என்மினே 5

3309 என் மின்னுநூல் மார்வன் *
என் கரும்பெருமான் என் கண்ணன் *
தன்மன்னு நீள்கழல் மேல் *
தண்துழாய் நமக்கன்றி நல்கான் **
கன்மின்கள் என்று உம்மை யான் *
கற்பியா வைத்த மாற்றம் சொல்லி *
சென்மின்கள் தீவினையேன் *
வளர்த்த சிறு பூவைகளே! 6

3310 பூவைகள் போல் நிறத்தன் *
புண்டரீகங்கள் போலும் கண்ணன் *
யாவையும் யாவருமாய் *
நின்ற மாயன் என் ஆழிப்பிரான் **
மாவை வல்வாய் பிளந்த *
மதுசூதற்கு என் மாற்றம் சொல்லி *
பாவைகள்! தீர்க்கிற்றிரே *
வினையாட்டியேன் பாசறவே 7

3311 பாசறவெய்தி இன்னே *
வினையேன் எனை ஊழி நைவேன்? *
ஆசறு தூவி வெள்ளைக்
குருகே! * அருள் செய்து[1] ஒருநாள் **
மாசறு நீலச் சுடர் முடி *
வானவர் கோனைக் கண்டு *
ஏசறும் நும்மை அல்லால் *
மறுநோக்கிலள் பேர்த்து மற்றே 8

3312 பேர்த்து மற்றோர் களைகண் *
வினையாட்டியேன் நான் ஒன்றிலேன் *
நீர்த்திரை மேல் உலவி *
இரை தேரும்புதாவினங்காள்! **
கார்த்திரள் மாமுகில் போல் *

[1] செய்

கண்ணன் விண்ணவர் கோனைக் கண்டு *
வார்த்தைகள் கொண்டருளி
உரையீர் * வைகல் வந்திருந்தே 9

3313 வந்திருந்து உம்முடைய *
மணிச்சேவலும் நீரும் எல்லாம் *
அந்தரம் ஒன்றும் இன்றி *
அலர்மேல் அசையும் அன்னங்காள்! **
என் திருமார்வற்கு என்னை *
இன்னவாறு இவள் காண்மின் என்று *
மந்திரத்தொன்று உணர்த்தி
உரையீர் * மறுமாற்றங்களே 10

3314 * மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு *
மதுசூத பிரான் அடிமேல் *
நாற்றங்கொள் பூம்பொழில் சூழ் *
குருகூர்ச் சடகோபன் சொன்ன **
தோற்றங்கள் ஆயிரத்துள் *
இவையுமொரு பத்தும் வல்லார் *
ஊற்றின்கண் நுண்மணல் போல் *
உருகா நிற்பர் நீராயே 11

**அடிவரவு:** பொன் மை ஓடி தூமது நுங்கள் என் பூவை பாசற
பேர்த்து வந்து மாற்றம் நீர்